குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.71/2020

அ.சா.5

2026–ம் ஆண்டு பிப்ரவரி 23–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ் | தொழில் | |
| தந்தை பெயர் | வெங்கடாஜலம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.54 மணி,

Accused Arivazhagan absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr. present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் பாகலூர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.12.2018 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு ஓமலூர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, ஓமலூர் பச்சினம்பட்டி மோட்டுர் காட்டுவளவைச் சேர்ந்த பெருமாள் மகன் கணேஷ் என்பவரின் சாலை விபத்து குறித்து மணிபால் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், அங்கு சென்று நான் பார்த்தபோது, காயமடைந்த கணேஷ் என்பவர் பேசமுடியாமல் மயக்க நிலையில் சிகிச்சையில் இருந்ததால், அவருடன் இருந்த அவரது அண்ணன் பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து, அந்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண்.753/2018 சட்டப்பிரிவுகள் 279, 338 இதச–ன் படி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

2. பின்பு, வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஷ்ணு மற்றும் பாரதி

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 17:54:50 +0530

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சாட்சிகள் பாலகிருஷ்ணன், கண்ணன், அய்யந்துரை, இளையராஜா, செந்தில் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சிகிச்சையில் இருந்த கணேசன் என்பவர் மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே காலை 11.20 மணிக்கு இறந்துவிட்ட இறப்பு தகவல் கிடைக்கப்பெற்று அதனடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 338 இதச–விலிருந்து 279, 304(எ) இதச ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பின்பு, சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு அருகே வைத்து இறந்துபோன கணேசன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 13.00 மணிமுதல் 15.00 மணிவரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். ( **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5. பின்பு, சடலத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி, சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்பு, சாட்சிகள் பாலகிருஷ்ணன், சண்முகம், இருசாகவுண்டர், அய்யந்துரை, அய்யனார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, இவ்வழக்கின் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்திய டி.என்.52 ஜெ 2090 என்ற பதிவெண் கொண்ட லாரியின் ஓட்டுநரான எதிரி அறிவழகன் என்பவரை 20.12.2018 ஆம் தேதி பகல் 12.00 மணியளவில் காவல் நிலையம் முன்பாக வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்தேன்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 17:54:53 +0530

6. பின்பு, விபத்து ஏற்படுத்திய லாரி மற்றும் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனம் ஆகியவற்றை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு, வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளரிடம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

7. புகார் வாக்குமூலம் 18.12.2018 ஆம் தேதி பெறப்பட்டது என்றால் சரி. புகார் வாக்குமூலத்தின் சம்பவம் நடந்த சமயத்தில் விபத்தில் இறந்த கணேசன் என்பவர் தனது வீட்டிற்கு செல்வதற்காக வேலகவுண்டனூர் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் இருசக்கர வாகனத்தின் நின்று கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. சம்பவத்தின்போது, விபத்தில் இறந்த கணேசன் என்பவர் எந்த திசையில் இருந்து, எந்த திசை நோக்கி சென்று கொண்டிருந்தார் என்றால், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார்.

8. அ.சா.1 போலிசார் விசாரணையின்போது, விபத்தில் இறந்த கணேசன் என்பவர் டி.என்.30 பி.வி.344 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் ஓமலூர் – மோட்டுர் காட்டுவளவை நோக்கி சாலையின் இடதுபக்கம் செல்லாமல், சாலையின் வலதுபக்கமாக சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரி. பொதுவாக இருசக்கர வாகனத்தின் செல்பவர்கள் சாலையின் இடது புற ஓரமாக தான் செல்லவேண்டும் என்றால் சரி. ஆனால் சம்பவத்தின்போது, இவ்வழக்கு விபத்தில் இறந்த கணேசன் என்பவர் சாலையின் வலதுபுறம் சென்று கொண்டிருந்தார் என்றால் சரி.

9. மேற்படி கணேசன் சாலை விதிகளை மீறி அஜாக்கிரதையாக இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரி. சம்பவ இடத்திற்கு அருகில் மின்விளக்குகள் இருந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, சம்பவ இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் மின் விளக்கு இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தில் சம்பவத்தின்போது என்ன லோடு இருந்தது என்று வழக்கு கோப்புகளில் குறிப்பிடவில்லை என்றால் சரி.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 17:54:57 +0530

10. நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு, விபத்தில் இறந்த நபருக்கு நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் விபத்து எதுவும் ஏற்படவில்லை என்றாலும், இவ்வழக்கு எதிரி வாகனத்தை சாலை விதிகளை பின்பற்றி இயக்கி வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு விபத்திற்கு காரணம் விபத்தில் இறந்த கணேசன் என்பவரது அஜாக்கிரதை தான் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.24 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 17:55:01 +0530